புதுச்சேரி அரசு
கலை, பண்பாட்டுத்துறை

## அம்ரித் மகோத்சவ் - இந்தியா @ 75
## சுதந்திர இந்தியாவின் வைர விழா

## பத்திரிகைச் செய்தி

புதுச்சேரி அரசு, கலை பண்பாட்டுத்துறை சுதந்திர விழாவின் 75ம் ஆண்டு கொண்டாட்டமான **"ஆசாதி க அம்ருத் மகோத்சவ்"** முன்னிட்டு வரும் 19-03-2021 முதல் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கடற்கரைச் சாலை, காந்தி திடலில் நடத்த திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் துவக்க விழாவில் துணை நிலை ஆளுநர் தமிழிசை சவுந்திரராஜன் கலந்துகொண்டு நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார்.

இந்தியாவின் 75ம் ஆண்டு சுதந்திர தினம், அடுத்த ஆண்டு கொண்டாடப்பட உள்ளது. இந்த 75வது சுதந்திர தின விழாவை **"ஆசாதி க அம்ருத் மகோத்சவ்"** என்ற பெயரில் 75 வாரங்கள் கொண்டாட மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதன் துவக்க விழா உப்பு சத்தியாகிரகத்துக்காக மஹாத்மா காந்தி மேற்கொண்ட தண்டி யாத்திரை துவக்கப்பட்ட மார்ச் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடக்கும் என மத்திய அரசு அறிவித்திருந்தது. அதன் தொடர்ச்சியாக நாடு முழுவதும் சுதந்திர போராட்ட வரலாறு மற்றும் தேச பக்தி நிகழ்ச்சிகளை நடத்தவும் மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு தெரிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து இம்மாதம் 12ம் தேதி புதுச்சேரியில் 75 வார சிறப்பு நிகழ்ச்சிகளின் தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திருமதி தமிழிசை சவுந்திரராஜன் பங்கேற்று சைக்கிள் பேரணி மற்றும் கலை நிகழ்ச்சிகை தொடங்கிவைத்தார்.

அதன் தொடர்ச்சியாக புதுச்சேரி அரசு கலை, பண்பாட்டுத்துறை சார்பில் முதல் கட்டமாக நடைபெறும் சுதந்திர போராட்ட வரலாறு மற்றும் தேச பக்தி நிகழ்ச்சிகள் இன்று 19.03.2021 முதல் 05.04.2021 வரை நடைபெறவுள்ளன.